

பாமாலை 95 மாட்சி போரை

1 மாட்சி போரை போரின் ஓய்வை
பாடு எந்தன் உள்ளமே!
மாட்சி வெற்றி சின்னம் போற்றி
பாடு வெற்றி கீதமே;
மாந்தர் மீட்பர் கிறிஸ்து நாதர்
மாண்டு பெற்றார் வெற்றியே.

2 காலம் நிறைவேற, வந்தார்
தந்தை வார்த்தை மைந்தனாய்;
ஞாலம் வந்தார் வானம் நீத்தே
கன்னித் தயார் மைந்தனாய்
வாழ்ந்தார் தெய்வ மாந்தனாக
இருள் நீக்கும் ஜோதியாய்.

3 மூன்று பத்து ஆண்டின் ஈற்றில்
விட்டார் வீடு சேவைக்காய்!
தந்தை சித்தம் நிறைவேற்றி
வாழ்ந்தார்; தந்தை சுத்தமாய்
சிலுவையில் தம்மை ஈந்தார்
தூய இயேசு பலியாய்.